# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


**சுற்றறிக்கை எண் 10/2014** **நாள் : 10/04/2014**

**பெறுநர்**
மாநில நிர்வாகிகள்
கிளைச் செயலாளர்கள்
மாநில செயற்குழு உறுப்பினர்கள்

அன்பான தோழரே,

வணக்கம்,

2014 ஏப்ரல் 24ல் தமிழகத்தில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் இடதுசாரிகள் வெற்றிபெற அயராது உழைத்த அனைவருக்கும் மின்ஊழியர் மத்திய அமைப்பின் சார்பாக தனது மனமார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தேர்தல் பணிகளான நிதிவசூலில் இதுவரை நாம் 35 லட்சத்திற்கும் மேற்பட்ட நிதியை வசூலித்து அளித்துள்ளோம். இரண்டு நாள் முதல் 15 நாட்கள் வரை விடுப்பு எடுத்து 500க்கும் மேற்பட்ட முன்னணி ஊழியர்கள் தேர்தல் பணியாற்றி உள்ளனர். இவை தவிர விடுப்பு எடுக்காமல் நிதிவசூல், பிரச்சாரம் போன்றவற்றில் ஈடுபட்டவர்கள் சுமார் 300க்கும் மேற்பட்டவர்களாவார்கள் தேர்தல் பணிகளான நிதிவசூல் பிரச்சாரம், வீடுகளுக்கு சென்று வாக்கு சேகரிப்பு போன்ற அனைத்து பணிகளிலும் ஈடுபடும் போது சில புதிய பகுதிகளும், புதியவர்களும் நமக்கு அறிமுகமாகி உள்ளனர். அவர்களை ஸ்தாபனப்படுத்த வேண்டிய பெரும்பொறுப்பு நம் முன்னால் உள்ளது. அந்த பணியை திட்டமிட்டு ஆற்றிட வேண்டும்.

தேர்தல் பணிகளை முடித்துள்ள நாம் மின்வாரிய ஊழியர்களின் கேந்திரமான கோரிக்கைகள் மீது நடவடிக்கை எடுக்கும் விதமாக வாரியத்தை அனுகி உள்ளோம்.

## மஸ்தூரிலிருந்து கள உதவியாளர்

10,500 மஸ்தூர்களை, கள உதவியாளர்களாக பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்று கடிதம் கொடுத்து தொடர்ச்சியாக வலியுறுத்தியதன் அடிப்படையில் 4.3.2014 அன்று 4660 மஸ்தூர்களை களஉதவியாளர்களாக பதவி உயர்வு அளிக்க வாரியம் உத்திரவிட்டது. 5.3.2014 அன்று தேர்தல் விதிமுறைகள் நடைமுறைக்கு வந்தன. இருப்பினும், 4.3.2014 தேதியிட்டு திருச்சி, சேலம் போன்ற மண்டலங்களில் பதவி உயர்வுக்கான உத்திரவு வெளியிடப்பட்டது. மத்திய அமைப்பின் வற்புறுத்தல் மற்றும் கிளைகள் எடுத்த முயற்சியின் அடிப்படையில் சென்னை, விழுப்புரம் ஆகிய மண்டலங்களில் பதவி உயர்வுக்கான உத்தரவு வழங்கப்பட்டது. நெல்லை, கோவை, வேலூர்,மதுரை போன்ற மண்டலங்களில் தேர்தல் விதிமுறைகளை காரணம் காட்டி பதவி உயர்வு வழங்க இயலாது என்ற நிலை எடுத்தனர்.

கோவை, தர்மபுரி போன்ற இடங்களில் இவைகளை எதிர்த்து இயக்கங்கள் நடைபெற்றன. வாரியத் தலைமையோடு தொடர்ச்சியான வற்புறுத்தலும் நடைபெற்றதன் அடிப்படையில் தமிழகத்தில் தேர்தல் முடிந்துள்ள நிலையிலும் பதவி உயர்வுகளை வழங்க வாரிய தலைமையகத்திலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டதன் அடிப்படையிலும் மதுரை, கோவை, வேலூர் போன்ற மண்டலங்களில் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. இவைகளுக்கு பின்னரும் நெல்லை, தூத்துக்குடி போன்ற வட்டங்களில் பதவி உயர்வு வழங்குவதில் காலதாமதம் நீடிக்கிறது. நமது தோழர்கள் தொடர்ச்சியாக பதவி உயர்வு வழங்க வலியுறுத்தி வருகின்றனர்.

10,500 மஸ்தூர்களில் 4660 மஸ்தூர்களுக்கு கள உதவியாளர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்ட பின்னர் மீதமுள்ள 5840 மஸ்தூர்களுக்கு கள உதவியாளர்களாக பதவி உயர்வு உடனடியாக வழங்கிட வலியுறுத்தி வாரியத்திற்கு கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் திட்டங்களில் காலியாக உள்ள கம்பியாளர், வணிக உதவியாளர் பதவிகளை நிரப்புவதன் மூலமாக ஏற்படும் கள உதவியாளர் காலி பணியிடங்களையும் கணக்கில் கொண்டு உடனடியாக பதவி உயர்வு வழங்கிட வேண்டுமென கடிதம் கொடுத்து வலியுறுத்தி உள்ளோம்.

## புதிய பதவிகள் அனுமதித்தல்.

9.01.2014ல் ஏற்பட்ட ஊதியஉயர்வு, வேலைபளு சம்மந்தமாக ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் 31.12.2013 வரை உள்ள மின் இணைப்புகளுக்கு புதிய பதவிகளை அனுமதித்து அவைகளை நிரப்பிட வேண்டும் என கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. அதில்புதிய மின் இணைப்புகளுக்கு ஏற்ப, புதிய பதவிகளுக்கான ஆலோசனை அனுப்பிட வேண்டும் என்று தலைமையகத்திலிருந்து தேதிகள் நிர்ணயிக்கப்பட்டு கடிதம் அனுப்பிய பின்னரும் 4 திட்டங்களிலிருந்து மட்டுமே ஆலோசனைகள் வந்துள்ளதாக வாரிய தரப்பில் கூறப்படுகிறது நமது திட்ட நிர்வாகிகள் சம்மந்தப்பட்ட மேற்பார்வை பொறியாளர்களை அணுகி புதிய வேலைப்பளு ஒப்பந்த அடிப்படையில் புதிய ஊழியர்களுக்கான ஆலோசனையை உடனடியாக அனுப்பிடச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## கணக்கீட்டாளர் இரண்டாம் நிலையிலிருந்து கணக்கீட்டாளராக பதவி மாற்றம்

10.8.2007 ஒப்பந்தத்தின் அடிப்படையில் 21,600 ஒப்பந்த தொழிலாளர்களில் கல்வித் தகுதி உள்ள 4356 ஒப்பந்த தொழிலாளிகளை கணக்கீட்டாளர் இரண்டாம் நிலையாக தேர்வு செய்தனர். ஒப்பந்தத்தில் கணக்கீட்டாளர் இரண்டாம் நிலையில் உள்ளவர்கள் அடுத்த பதவி உயர்வுக்கு 5 வருடம் காத்திருக்க வேண்டும் என்ற சரத்து 9.1.2014 ஒப்பந்தத்தின் அடிப்படையில் இரண்டாண்டாக குறைக்கப்பட்டுள்ளது. பணி நிரந்தரம் செய்யப்பட்ட 4356 கணக்கீட்டாளர் இரண்டாம் நிலையில் 9.1.2014 ஒப்பந்தத்திற்கு முன்னர் இருந்த ஒப்பந்த சரத்துப்படி 5 ஆண்டு காலம் பணிமுடித்த 933 கணக்கீட்டாளர் இரண்டாம் நிலையில் உள்ளவர்களை 14.2.2014 உத்தரவின் அடிப்படையில் கணக்கீட்டாளராக பதவி மாற்றம்செய்யப்பட்டனர். புதிய ஒப்பந்த சரத்துப்படி இரண்டாண்டு காலம் பணிமுடித்த கணக்கீட்டாளர் இரண்டாம் நிலையில் உள்ளவர்கள் 3404 ஊழியர்களை கணக்கீட்டாளராக பணி மாறுதல் செய்ய வேண்டும் என்று வாரியத்திற்கு கடிதம் கொடுத்து வற்புறுத்தி வருகிறோம்.

## 2005 - 2007ல் மஸ்தூர்களாக பணியமர்த்தப்பட்டவர்களின் முதன்மைப்பட்டியல் பொருத்துவது.

2005 ஆம் ஆண்டில் 2500 ஒப்பந்த தொழிலாளர்கள் மஸ்தூர்களாக நியமிக்கப்பட்டவர்கள் மற்றும் 2007ல் மஸ்தூர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு முதன்மை பட்டியல் நிர்ணயிக்கும் போது வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட இரண்டாண்டு காலத்தில் அதாவது 2007, 2009ல் களஉதவியாளர்களாக பதவி உயர்வு அளிக்கப்பட்டதாக கணக்கில் கொண்டு கள உதவியாளர் முதன்மை பட்டியலில் முதன்மையாக பொருத்தி பதவி உயர்வு வழங்க வேண்டும் என்று கடிதம் கொடுக்கப்பட்டு வலியுறுத்தப்பட்டு வருகிறது.

## எல்பர்-கம்-மீட்டர் ரீடர் ஊழியர்களின் முதன்மைப்பட்டில் வரையறுப்பு

10.08.2007 ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒப்பந்த தொழிலாளர்களை பணிநியமனம் செய்த பொழுது கல்வித் தகுதி உள்ளவர்களுக்கு எல்பர்-கம்-மீட்டர் ரீடராக பணிநியமனம் வழங்கப்பட்டது. அப்படி எல்பர்-கம்-மீட்டர் ரீடராக மதிப்பூதியம் வழங்கப்பட்டுள்ளவர்களை கள உதவியாளர் பயிற்சியாக பணி ஏற்றவர்களுக்கு முன்பாக முதன்மைப் பட்டியலில் முன்வைக்க வேண்டும் என்று வாரியத்திடம் கடிதம்கொடுத்து வலியுறுத்தி வருகிறோம்.

இவைகள் சம்மந்தமாக வாரியத்திற்கு எழுதிய கடிதங்கள் ஜுன் 2014ல் வெளிவரும் மின்கதிரில் பிரசுரிக்கப்பட உள்ளது.

## 2013 ஆம்ஆண்டு உறுப்பினர் இறுதிப்படுத்துதல்

2013 ஆம் ஆண்டின் உறுப்பினர் எண்ணிக்கை இறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டிற்கான ஈ-படிவம் சமர்ப்பிக்கப்பட உள்ள நிலையில் 2013 ஆம் ஆண்டின் உறுப்பினர் சந்தா திட்டமட்டத்தில் கைவசம் இருக்குமாயின் அதை உடனடியாக மாநில மையத்திற்கு அனுப்பிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

## தோழர் எஸ்.பி.ஆர். மகன் திருமணம்

மத்திய அமைப்பின் பொதுச் செயலாளராகவும், தலைவராகவும் பணியாற்றிய தோழர் எஸ். பஞ்சரத்னம் அவர்களின் மகன் திரு. பி. சண்முகம் அவர்களுக்கு 1.6.2014 அன்று நெல்லையில் திருமணம் நடைபெற உள்ளது. அனைவரும் திருமணத்தில் கலந்து கொண்டு வாழ்த்திட வேண்டுகிறோம்.

தோழமையுள்ள



**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்